# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D.ஜான்சிராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 13–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.6/2026 இன் அ.வ.எண்.178/2004**

**CNR No. TNSA13-000092-2004**

1. செல்வலட்சுமி

2. பாக்கியம்

3. உஷாராணி . . . மனுதாரர்கள்/1 முதல்3 பிரதிவாதிகள்

/எதிராக/

1. A.சுப்ரமணியன் (இறந்தவர்)

2. தமிழரசி

3. பாரத் கௌதம் . . . எதிர்மனுதாரர்கள் /வாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 13.02.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் திரு.P.கோபி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் இம்மனுவுடன் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை, மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 1(A) மற்றும் பிரிவு 151ன் படி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

II. **<u>மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>**

மனுதாரர் மனுவில் 2ம் மனுதாரும், தாவாவில் 2ம் பிரதிவாதி என்றும், தனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை மற்றும் தனித்த சுவாதீனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணமானது மனுதாரர்கள் தரப்பு வழக்கை நிரூபிக்க அவசியமான ஆவணங்கள் என்றும், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணமானது மனுதாரரின் வீட்டில் வேறு சில பேப்பர்களுடன் கலந்து விட்டதாகவும், எனவே காலதாமதமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்று, மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டியது அவசியம் என இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

III. **<u>2ம் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்து 3ம் எதிர்மனுதாரர்/வாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இம்மனுவில் எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்றும், இந்த வழக்கானது 1975 ம் ஆண்டு வாதியால் தாக்கல் செய்யப்பட்டு தற்பொழுது 2026ம் ஆண்டு 51 ஆண்டுகளுக்கும் மேலான தாமதத்துடன், மனுதாரர்கள் 1 முதல் 6 வரையிலான ஆவணங்களைப் ஏற்கக் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், 51 ஆண்டுகளுக்கு மேலான ஒவ்வொரு நாளுக்கும் ஏற்பட்ட காலதாமதம் குறித்த காரணங்கள் இம்மனுவில் தெரிவிக்கப்பட்வில்லை என்றும், காலதாமத நாட்கள் குறிப்பிடப்படாததால், இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 1976 & 1994 ஆம் ஆண்டுகளில் பதிலுரை தாக்கல் செய்ததாகவும், மேலும் பிரதிவாதிகள் 2022 ஆம் ஆண்டில் கூடுதல் பதிலுரையை தாக்கல் செய்துள்ளதாகவும், 1976, 1993 & 2022 ஆம் ஆண்டுகளில் தாக்கல் செய்யப்பட்ட எந்த பதிலுரையிலும் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள்

குறித்து குறிப்பிடப்படவில்லை என்றும், இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள 1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டு உருவாக்கப்பட்டவை என்றும், மனுதாரர்கள் மனுவுடன் சமர்ப்பித்த ஆவணங்கள் வழக்குக்குப் பொருந்தாது என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

IV. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்?

VII. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தனது தரப்பில் குறியீடு செய்ய வேண்டும் என இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் வழக்கிற்கு பின்னிட்டு உருவாகப்பட்டவை என்றும், எனவே இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு அவசியமற்ற ஆவணங்கள் என்றும் எதிருரை தாக்கல் செய்துள்ளனர்.

வழக்கானது பாகம் மற்றும் தனித்த சுவாதீனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாகம் கோரியுள்ள இவ்வழக்கில் இருதரப்பு ஆவணங்களையும் பரிசீலனை செய்தால் மட்டுமே வழக்கில் இறுதியான தீர்வு காண இயலும். மேலும் இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்கள் பற்றி எதிர்மனுதாரர்கள் அவரை தங்களது தரப்பில் குறுக்கு விசாரணை செய்து கொள்ளலாம் என்பதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிப்பதே உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**VIII. தீர்வு :**

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 13–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.02.13 18:08:25 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

1. மனுதாரர்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :

இல்லை

2. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.02.13 18:08:32 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

கூ.மா.உ.நீ., ஆத்தூர்.
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 6/2026 இன்
அ.வ. எண்.178/2004
நாள் : 13.02.2026